**புதியவருமானவரிதிட்டம்... லாபம்இருக்கும், ஆனால்?**

சேமிப்பு




நாற்பதுஆண்டுகாலவருமானவரிச்சட்டத்தில்மெகாமாற்றத்தைக்கொண்டுவரப்போகிறதுமத்தியஅரசு. கடந்தஜூலை 6-ம்தேதிபட்ஜெட்அறிவிப்பின்போது, மத்தியநிதிஅமைச்சர்பிரணாப்முகர்ஜி, 'புதியவரிச்சட்டம் 45 நாட்களுக்குள்கொண்டுவரப்படும்' எனஅறிவித்தார். ஆனால், அதற்குஒருவாரகாலத்துக்குமுன்பேசுறுசுறுப்பாகவரைவுத்திட்டத்தைக்கொண்டுவந்துவிட்டார்.

புதியதிட்டத்தில்என்னென்னமாறுதல்கள்செய்யப்பட்டுள்ளன, அதனால்லாபமா, நஷ்டமா, என்பதுதான்இப்போதுநான்குபேர்கூடும்இடங்களில்ஹாட்டாபிக்!


பூபதி


சதீஷ்குமார்

சென்னையைச்சேர்ந்தபிரபலஆடிட்டர்எஸ்.சதீஷ்குமார், "பத்துலட்சரூபாய்வரையிலானவருமானத்துக்குபத்துசதவிகிதம்தான்வருமானவரிஎன்பதுதனிநபர்களுக்குமிகவும்லாபகரமாகஇருக்கும். எந்தவிதமுதலீடும்செய்யாமலே, இந்தஅளவுவருமானம்ஈட்டும்தனிநபர்கள்அவர்கள்ஆணாகஇருந்தால் 84 ஆயிரம்ரூபாயும், பெண்ணாகஇருந்தால் 81 ஆயிரம்ரூபாயும், மூத்தகுடிமக்கள்என்றால் 76 ஆயிரம்ரூபாயும்வரியாகக்கட்டினால்போதும். தற்போது 80-சிமுதலீடு, வீட்டுக்கடனுக்கானவட்டியில்சலுகைஎல்லாம்சேர்ந்து 2.5 லட்சரூபாய்க்குவரிவிலக்குதரப்பட்டுள்ளது. புதியவரிச்சட்டத்தில்சேமிப்புக்கானவரிச்சலுகை 3 லட்சமாகஅதிகரிக்கப்படஉள்ளது.

உயர்கல்விக்காகவாங்கும்கடனில்வட்டி, குழந்தைகள்படிப்புச்செலவு, ஹெல்த்இன்ஷ்ரன்ஸ்பிரீமியம், தீவிரநோய்ப்பாதிப்புக்கானமருத்துவச்சிகிச்சை, சுயமாகச்செயல்படமுடியாமல்சார்ந்திருப்பவர்களுக்கானமருத்துவசிகிச்சை, நன்கொடை, உள்ளிட்டவைகளுக்கும்வரிவிலக்குஅளிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில்இந்தமாற்றம்சிறப்பானதுதான். அடுத்துவரிச்சேமிப்புக்கானமுதலீடு, மூன்றுமடங்காகஅதிகரிக்கப்படஇருக்கிறது. இதுஅதிகவருமானப்பிரிவினரிடையேசேமிப்பைஅதிகரிக்கஉதவும்" என்றார்.

புதியமுறைப்படிபணியாளர்களுக்குச்சம்பளத்தோடுசலுகைகளுக்கானதொகையும்சேர்க்கப்பட்டுவரிவிதிக்கப்படுகிறது. அதாவது, பணியாளர்நிறுவனம்அளிக்கும்வாடகைஇல்லாகுடியிருப்பில்வசித்தாலும், அதற்கும்ஒருதொகைபோடப்பட்டுசம்பளத்தோடுசேர்க்கப்படுகிறது. இதேபோல்நிறுவனம்ஊழியர்களுக்குவழங்கும்மருத்துவப்படியையும்ஊதியத்துடன்சேர்த்துவரிகணக்கிடப்படவு

ள்ளது.

வீட்டுக்கடனைப்பொறுத்தவரைதிரும்பச்செலுத்தப்படும்கடனில்அசலுக்குவரிச்சலுகைஎதுவும்இல்லைஎன்பதுபலருக்குஅதிர்ச்சியானசெய்தியாகத்தான்இருக்கும். கடனில்வாங்கியவீட்டில்குடியிருந்தால்வரிச்சலுகைகிடையாது. ஆனால், கடனில்வாங்கியவீட்டைவாடகைக்குவிட்டிருந்தால், வாடகையைவருமானமாகக்காட்டினால், முழுவட்டிக்கும்வரிச்சலுகைஉண்டு.

## முக்கிய அம்சங்கள்

**ப**ங்கு பரிவர்த்தனை வரி (எஸ்.டி.டி.) நீக்கம்: முதலீட்டாளர்கள், தினசரி வர்த்தகர்கள், புரோக்கர்களுக்கு லாபகரமாக அமையும். பங்கு முதலீடு மற்றும் வர்த்தக அதிகரிப்புக்கு உதவும்.


**செ**ல்வ வரி விதிப்புக்கான தொகை ரூ.30 லட்சத்திலிருந்து ரூ.50 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. வரி விதிப்பும் 1 சதவிகிதத்திலிருந்து 0.25% ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் சொத்து மட்டும் செல்வ வரி விதிப்புக்கு உட்பட்டது. இப்போது பங்குகள், கடன் பத்திரங்கள், மியூச்சுவல் ஃபண்ட் முதலீடும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

**கு**றுகிய மற்றும் நீண்டகால மூலதன ஆதாயம் நீக்கப்பட்டு ஒரே மூலதன ஆதாயம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஓராண்டுக்கு மேற்பட்டிருந்தால் பணவீக்க விகித சரிக் கட்டல் (இண்டெக்சேஷன்) உண்டு. அதற்கு அடிப்படை ஆண்டாக 2000 (ஏப்ரல்1) எடுத்துக்கொள்ளப்பட்டு மூலதன ஆதாயம் கணக்கிடப்பட்டு வரி விதிக்கப்படும்.

சொந்தவீடுஎன்பதுஅடிப்படைத்தேவைகளில்முக்கியமானதுஎன்பதால், அசல்மற்றும்வட்டிக்குவரிச்சலுகைவழங்குவதேநியாயமானதாகஇருக்கும். அரசின்இந்தநடவடிக்கைநடுத்தரமக்களிடையேஅதிருப்தியைஏற்படுத்தக்கூடும்.

ரியல்எஸ்டேட்துறையைப்பொறுத்தவரைஇதற்குமுன்அதிகசம்பளம்வாங்கியவர்கள், வரியைமிச்சப்படுத்தும்நோக்கோடுவிலைஅதிகம்என்றாலும்வீடுகளைவாங்கினார்கள். இனிஅதுபோன்றநிலைஇருக்காதுஎன்பதால், சொத்தின்மதிப்புகணிசமாகக்குறையவாய்ப்பிருக்கிறது. வங்கிகளும்வீட்டுக்கடனுக்கானவட்டிவிகிதத்தைஇன்னும்குறைக்கலாம்!

மேலும்அனைத்துச்சேமிப்புத்திட்டங்களும்வரிவிலக்கு, வரிவிலக்கு, வரிவிதிப்புஎன்ற 'இ.இ.டி' (Exempt Exempt Taxation) முறையின்கீழ்வருகிறது. இதன்படிபி.எஃப்., இன்ஷ¨ரன்ஸ்போன்றவற்றுக்குமுதலீடுமற்றும்முதலீட்டுபெருக்கத்துக்குவரிகிடையாது. அந்தப்பணத்தைஎடுக்கும்போது, அவரவரின்அடிப்படைவருமானவரம்புக்குஉட்பட்டுவரிகட்டவேண்டும். ஆனால், 2011 மார்ச் 31-ம்தேதிக்குமுன்பி.எஃப்., பி.பி.எஃப்.,




**ஜி.**டி.பி-க்கும் வரிக்குமான விகிதத்தைப் பொறுத்தவரை பிரேசில், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் உலக சராசரியை விட இந்தியா குறைவாக இருக்கிறது. அதிகமான வரிவிகிதம் இருந்தும் ஜி.டி.பி-யில் வருமானவரியின் பங்கு மிகவும் குறைந்திருப்பது, நம்நாட்டில் வரி ஏய்ப்பவர்கள் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. மேலும் வரி வசூல் செய்வதிலும் அரசாங்கத்தின் மெத்தனம் பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

காப்பீடுதிட்டங்கள்மூலம்கிடைக்கும்தொகைக்குவரிகட்டவேண்டியதிருக்காது.
அதுவரைக்கும்சேர்ந்திருக்கும்தொகைமற்றும்அதற்குக்கிடைக்கும்வட்டி வருமானத்துக்கும்பிற்காலத்தில்எடுக்கும்போதும்வரிஇருக்காது.
மேலேகுறிப்பிட்டிருக்கும்தேதிக்குப்பிறகுசெய்யப்படும்பி.எஃப்., பி.பி.எஃப்.
தொகையைஎப்போதுஎடுத்தாலும்முதிர்வுத்தொகைக்குவரிவிதிக்கப்பட்டிருக்கிறது.

புதியவரிவிதிப்புச்சட்டத்தின்அம்சங்களைஎப்படிச்சாதகமாக பயன்படுத்திக்கொள்வதுஎன்றுசார்டர்ட்அக்கவுன்டன்ட்ஆர்.பூபதிவிளக்கிச்சொன்னார்.

"தங்கம், பங்குகள்,
சொத்துக்கள்போன்றவற்றைவிற்றதன்மூலமானமூலதனஆதாயத்தைகேப்பிட்டல்கெயின்அக்கவுன்ட்ஸ்கீமில்முதலீடுசெய்தால்வரிகட்டவேண்டாம்.
இந்தமுதலீட்டுக்குவங்கிவட்டிக்குஏற்றாற்போல்வட்டிதரப்படும். இந்தப்பணத்தைஎடுக்கும்போதுவரிஉண்டு.
பின்னால்பணிஓய்வுக்குப்பிறகுஎடுத்தால்குறைவானவரிகட்டும்நிலைஏற்படும். அதாவது,
ஒருவர்ஓய்வுபெற்றபிறகுஅவரின்வருமானம்குறைந்துவிடும்.
சிலநேரங்களில்வரிஇல்லாமல்போகும்நிலைஏற்படக்கூடும்.
அல்லது 10% வரியோடுபோய்விடும். இதேபோல், பி.எஃப்.
போன்றமுதலீட்டில்பணத்தைஎடுக்கும்போதுவரிஉண்டுஎன்பதுமக்களைநீண்டகாலச்சேமிப்புக்குக்கொண்டுசெல்லும்.
பணிஓய்வுபெற்றபிறகுவருமானம்குறைந்துவிடும்.
அப்போதுமுதிர்வுத்தொகைஎதுவாகஇருந்தாலும்,
ஒருவர்கட்டும்வரிவிகிதம்குறைவாகஇருக்கும்என்பதால்லாபகரமாகவேஇருக்கும்.
மேலும்இந்தமுதிர்வுத்தொகையிலிருந்துதேவைக்குஏற்பகொஞ்சம்கொஞ்சமாகபணத்தைஎடுத்துவந்தால்வரிகட்டுவதுகுறையலாம்'' என்றார்.

## நிறுவனங்களுக்கு என்னென்ன?

**நி**றுவனங்களுக்கான வரி 30%-லிருந்து 25%-ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. இது சீனாவின் வரி விதிப்புக்கு இணையானதாக உள்ளது.

**'மேட்'** என்ற குறைந்தபட்ச மாற்று வரி இப்போது நிறுவனங்களின் மொத்த லாபத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. புதிய முறையில், நிதி ஆண்டு இறுதியில் நிறுவனங்களின் மொத்த சொத்து மதிப்பின் அடிப்படையில் வரி விதிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நிறுவனங்களுக்கு 2%, வங்கிகளுக்கு 0.25%.

**நி**றுவனங்கள் அவற்றின் வருமான இழப்பை இதற்கு முன் அடுத்து வரும் 8 ஆண்டுகளுக்குத்தான் ஈடுகட்ட முடியும். இனி இது காலவரையற்றதாக மாற்றப்படுகிறது.

120 கோடிமக்கள்தொகைகொண்டஇந்தியாவில் 2.70 கோடிபேர்தான்வரிகட்டிவருகிறார்கள். வரிகுறைக்கப்பட்டிருப்பதால்நாட்டில்வரிஏய்ப்புகுறையும். கணிசமானகள்ளப்பணம்கணக்கில்காட்டப்படும்என் பதுமத்தியஅரசின்கணிப்பாகஇருக்கிறது.

சரியானரிட்டர்ன்தாக்கல்செய்யாதவர்கள்,வரிஏய்ப்பு செய்பவர்கள்ஆகியோருக்குஅபராதம்மற்றும்சட்டப்ப டியானநடவடிக்கைஎடுக்கத்திட்டமிடப்பட்டிருக்கிற து. வரிஏய்ப்பவர்களுக்குஅரைஆயுள்தண்டனை (7 ஆண்டுகள்) மற்றும்கடுமையானஅபராதம்போடும்திட்டமும்இரு க்கிறது.

தாராளசலுகைகள், கூடவேசிலசலுகைகள்நீக்கம்எனஒருகலவையாகத்தா ன்புதியவருமானவரிவரைவுஇருக்கிறது. இதுநாட்டுமக்களின்கருத்தறியப்பட்டுமாற்றங்கள்செ ய்யப்பட்டு, நாடாளுமன்றத்தில்விவாதிக்கப்பட்டுஒருவடிவுக்குவரும்போதுதான்முழுமைபெறும்.

### கருத்து அறிய..!

**வ**ருமான வரி இணையதளத்தில் 256 பக்கங்களைக் கொண்ட இந்த வரைவு குறித்து, பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள், அமைப்புகளின் கருத்தை அறிய வெளியிடப்பட்டிருக்கிறது. இவற்றின் அடிப்படையில் இது வரும் நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்டு, 2011, ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமலுக்கு வர இருக்கிறது.

*- சி.சரவணன்*